வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC. 54/2022

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சர்வலிங்கம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | காசிநாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 29.08.2024

1வது எதிரி ஆஜர். 2,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை–52 பாடியநல்லூரில் வசித்து வருகிறேன். நான் வழக்கு சம்பவ காலத்திலும் பாடியநல்லூரில்தான் நான் வசித்து வந்தேன். நான் மூலக்கடையில் உள்ள அமாள் கமிஷன் ரெப்கோ லிமிடெட் என்ற கம்பெனியில் தொழிலாளியாக பணிபுரிந்து வருகிநேன். நான் 1992 வருடம் முதல் பணி புரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி 2 ராஜேஸ்வரி எனது மனைவி ஆவார். தற்போது நான் எனது நிறுவனத்தில் இருந்து மாதம் ரூ. 55,000./ சம்பளம் பெற்று வருகிறேன். 12 மற்றும் 13 வருடங்களாக ராணி, குணசேகரன் அவருடைய மகன்களான பிரகாஷ், சுரேஷ் ஆகியோர்கள் மாதந்திர ஏலச் சீட்டு நடத்தி வந்தார்கள். மேற்கண்ட தொழிலை 2003 லிருந்து நடத்தி வந்தார்கள். என்னுடைய உறவினரான நடராஜன் மற்றும் அவருடைய மனைவியான தமிழ்செல்வி மூலமான குணசேகரன் மற்றும் ராணியை 2003 ஆண்டு எனக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். மேற்படி உறவினர்கள் மேற்படி குணசேகரன் மற்றும் ராணியிடம் அவர்களை நம்பி அவர்கள் ஏலச் சீட்டில் நான் சேரலாம் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில் 2003 ம் வருடத்தில் இருந்து மேற்படி குணசேகரன் மற்றும் ராணி நடத்திய பல்வேறு மாத

தவணைகளில் ஏலச் சீட்டுகளில் நானும் சேர்ந்தேன். மேலும் மேற்படி ஏலச் சீட்டுகளில் 20 மாத காலம். மேலும் மேற்படி ஏலச் சீட்டு தவணைகளுக்கு 5000 முதல் அதிக பட்சம் 200000 வரை ஏலச் சீட்டுக்களை மேற்படி குணசேகரனும், ராணியும் நடத்தினார்கள். மேலும் மேற்படி நபர்கள் நடத்திய 10 ஏலச் சீட்டுகளையும் நானும் சேர்ந்தேன். 8 லட்சத்தி 55 ஆயிரத்தை பணத்தை நான் கட்டினேன். மேற்படி தொகையை நான் குணசேகரன் மற்றும் ராணி ஆகியோர்களிடம் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி தொகையை நான் 20 தவணையாக மேற்படி நபர்களிடம் 2014 லிருந்து 2016 வரை கொடுத்தேன். மேலும் மேற்படி தொகையை குணசேகரன் மற்றும் ராணியின் வீடான மாதவரம் பொன்னியம்மன் சீவடு தணிகாச்சலம் நகரில் உள்ள வீடடில் கொடுத்தேன். மேற்படி கட்டிய தொகையினை மேற்படி குணசேகரனும், ராணியும் எனக்கு திருப்பி கொடுக்கவில்லை. அதனால் நான் அவர்களுடைய வீட்டிற்கு சென்று மேற்படி தொகை சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர்கள் என்னிடம் சீட்டு தொகையினை 2017 ஆண்டு ஜனவரி மாதத்தில் பாதியாகவும் மார்ச் மாதம் பாதியாகவுமெ திருப்பி கொடுப்பதாக கூறினார்கள். அதன்படி நான் 2017 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் (தேதி ஞாபகம் இல்லை) சென்று பார்த்தபோது அவர்கள் வீடு காலி செய்யப்பட்டிருந்தது. எனவே அன்று இரவே மேற்படி குணசேகரனை போனில் சீட்டு தொடர்பாக பேசினேன். அப்போது அவர் ரூபாய் 8லட்சத்தி 55 ஆயிரத்தை மாதா மாதம் ரூபாய் 10,000 வாங்கி கொள்ளுமாறு கூறினார். நான் அவரிடம் வீட்டு முகவரியை கேட்டேன். தரமுடியாது என்றும் அவ்வாறு கண்டுபிடித்து வந்தாலும் ஒரு ரூபாய் கூட அவரிடமிருந்து வாங்க முடியாது என கூறினார். அப்போது 2 நாட்களுக்கு பின்னர் எனது கம்பெனிக்கு அருகில் சென்றுகொண்டிருந்த போது மேற்படி குணசேகரன் இரண்டு 25 வயது மதிக்கத்தக்க ஆண் நபர்களுடன் வந்து சீட்டு பணத்தை நான் கேட்டால் என்னையும் எனது குடும்பத்தாரையும் கொன்றுவிடுவதாக மிரட்டினார். அப்போது மணி மதியம் 1.00மணி இருக்கும் . மேற்படி இரண்டு ஆண் நபர்கள் முகவரி, பெயர் எனக்கு தெரியாது. மிரட்டும்போதே அங்கிருந்து தப்பித்து வேலை செய்யும் கம்பெனிக்கு சென்றுவிட்டேன். மறுநாள் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலமாக மேற்படி ஏலச் சீட்டு தொகையினை ஏமாற்றியதாற்காக ராணி, குணசேகரன் ஏமாற்றியதற்காக புகார் மனு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் அளித்த புகார் என்றால் ஆமாம். மேற்படி புகாரானது அ.தசா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது. புகார் அளித்ததும் மாதவரம் காவல் நிலையத்திலிருந்து ஒரு வாரத்தில் வர கூறினார்கள். அப்போது மேற்படி காவல் நிலையத்தில் ராணி, குணசேகரனையும், பிரகாஷ், சுரேஷை அழைத்து பேசினார்கள். பேச்சுவார்த்தை எனக்கு திருப்தி அளிக்கவில்லை. நான் அளித்த புகிரில் மாதவரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யவில்லை. எனவே திருவெற்றியூர் நீதிமன்றத்தில் எனது புகாரில் நடவடிக்கை எடுக்ககோரி மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்க போலீசாரை உத்தரவிட்டார்கள். ;மேலும் நான் ஏலத்தொகையினை

**செலுத்தும்போது ஏலச்சீட்டுகள் தருவார்கள் மேற்படி ஏலச்சீட்டுகள் அனைத்தையும் மாதவரம் காவல் நிலையத்தில் அளித்தேன். அந்த சீட்டுகள்தான் என்னிடம் தற்போது காட்டப்படும் சீட்டுகள் என்றால் ஆமாம். மேற்படி ஏலச்சீட்டுகள் அ.த.சா.ஆ.2 ( 143 எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் ஏலச்சீட்டுகள் தொகை நான் செலுத்தும்போது எனது சம்பளம் மாதம் ரூ.40,000/-. மேலும் மேற்படி பணத்தினை பெற்றுக்கொண்டு எதிரிகள் நால்வரும் என்னை ஏமாற்றிவிட்டார்கள். திருவெற்றியூர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்மந்தமாக மாதவரம் போலீசார் வாக்குமுலமாக பதிவு செய்துகொண்டார்கள். மேலும் மேற்படி குணசேகரன், ராணி, சுரேஷ், பிரகாஷ் ஆகியோர்களை என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டமுடியும். இன்று குணசேகரன் மட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மற்ற எதிரிகள் ஆஜர் ஆகவில்லை. (மற்ற எதிரிகளின் அடையாளத்தை குறித்து கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை இல்லை என வாய்மொழியாக கூறினார்) .**

**குறுக்கு விசாரணை**

. எதிரிகளிடம் எப்போது சீட்டில் சேர்ந்தேன் என்றால் என்னை அறிமுகப்படுத்திய 2003ஆண்டே. எந்த ஆண்டிலிருந்து எதிரிகள் என்னிடம் சீட்டு பணத்தை தரவில்லை என்றால் 2014 முதல் 2016 ஆண்டு வரை. எத்தனை நபர்கள் சீட்டிற்கு வருவார்கள் என்றால் 10 நபர்கள். நான் ஏலச்சீட்டிற்கு செல்வேனா என்றால் ஏலச்சீட்டு எடுக்கவேண்டும் என்றால் செல்வேன். 2014 ஆண்டு நான் எந்த சீட்டும் எடுக்கவில்லை என்றால் ஆமாம். அ.'த.சா.ஆ.2 எப்போது அளித்தார்கள் என்றால் பணம் கட்டும்போது கொடுத்தார்கள். அ.த.சா.ஆ.2ல் எதிரிகள் கையொப்பம் இல்லை என்றால் ராணி கையொப்பம். யாருடைய கையொப்பமும் இல்லை என்றாலும் நானே அட்சடித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ1 புகாரில் 13 சீட்டுகள் சேர்ந்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை. நான் புகார் என்னை மிரட்டிய அடுத்த நாளே நான் அளித்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பியது என்றால் இல்லை. நான் 06,07,2015அன்று 15 மாதங்கள் 1லட்சம் ரூபாய் சீட்டிற்கு ரூபாய் 1 லட்சத்தி 21 ஆயிரம் கட்டியதாக நான் கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. அ.த.சாஆ.1 புகார் உண்மையா அல்லது பொய்யா என்றால் உண்மைதான். எங்களுக்குள் கொடுக்கல் வாங்கல் மட்டுமே சீட்டு பணம் ஏதும் எனக்கும் எதிரிக்கும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.